


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2054 ஏப்ரல் 13, 2023 புரட்சி 22 முழக்கம் 13 விலை: ரூ.3.00


# கரைபுரளும் உற்சாகம்; விளிம்புநிலை மக்களின் எளிய நன்கொடைகள்

# முழு வீச்சில் மாநாட்டுப் பணிகள்




*ஏப். 29, 30 தேதிகளில் கழக மாநாட்டுப் பணிகளில் கழகச் செயல் வீரர்கள் முழு வீச்சில் களத்தில் இறங்கியுள்ளனர்.*

**கோவை :** கோவை மாவட்டக் கழகத்தினர் ஏப்ரல் 8–ஆம் தேதி மாலை 5 மணியளவில் வ.உ.சி மைதானத்தில் மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, கோவை மாநகராட்சி மேயர் கல்பனா, துணை மேயர் வெற்றிச்செல்வன், மண்டலக்குழுத் தலைவர் கதிர்வேல், மாநகராட்சி கல்விக் குழுத் தலைவர் நா.மாலதி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவி, வடவள்ளி சண்முகசுந்தரம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகளை சந்தித்து மாநாட்டு அழைப்பிதழை வழங்கினார்கள்.

கலந்து கொண்டோர்: தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல் குமார், கிருட்டிணன், வெங்கட், மாதவன் சங்கர், துளசி, நிலா.

ஏப்ரல் 7–ஆம் தேதி மாலை 5 மணிக்கு கோவை காந்திபுரம் நகரப் பேருந்து நிலையத்தில் துண்டறிக்கை பரப்புரை நடைபெற்றது.

**பொள்ளாச்சி :** கழக மாநாட்டு விளக்க தெருமுனைக் கூட்டம் ஏப்ரல் 8, 9 ஆகிய தேதிகளில் பொள்ளாச்சி சுற்றுவட்டாரப் பகுதிகளில் மாவட்டச் செயலாளர் யாழ். வெள்ளிங்கிரி தலைமையில் நடைப்பெற்றது. பெரியாரியலாளர் விசயராகவன் தெருமுனைக் கூட்டத்தை தொடங்கி வைத்தார். பாடகர் கண்ணையன் புரட்சிகரப் பாடல்களை பாடினார்.

இதில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை அமைப்புச் செயலாளர் காசு.நாகராசன், மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் மாரிமுத்து, தமிழ்ப் புலிகள் கட்சி வானூகன் மாநாட்டை விளக்கி சிறப்புரை யாற்றினர். சபரிகிரி, ஆனந்த், வினோதினி, அரிதாசு, பிரபாகரன், நடராஜன், பிரபு, கணேசு, வெங்கட், கிருபா, மணி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**சென்னை:** ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், த.பெ.தி.க. தலைவர் ஆனூர் ஜெகதீசன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், ஆதிதமிழர் பேரவைத் தலைவர் அதியமான், த.பெ.தி.க. துணைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் துரைசாமி, தலைமை நிலையச் செயலாளர் வழக்கறிஞர் இளங்கோவன், உயர்நீதிமன்ற கழக வழக்கறிஞர் திருமூர்த்தி ஆகியோரை சந்தித்து மாநாட்டு அழைப்பிதழை கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன் உள்ளிட்ட தோழர்கள் வழங்கினார்கள்.

புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் மற்றும் இது தமிழ்நாடு! இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாடு! விளக்கக் கூட்டம், ஏப்ரல் 13, வியாழன் மாலை 5 மணிக்கு அயனாவரத்தில், சேத்துப்பட்டு இராசேந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

திமு கழகப் பொதுக்குழு உறுப்பினர் சைதை மா. அன்பரசன், கழக தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி மற்றும் சி.மணிவண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

மயிலைப் பகுதி சார்பில் துண்டறிக்கை மற்றும் கடைவீதி வசூல், ஏப்ரல் 5, 6ஆம் தேதிகளில் திருவான்மியூர் பகுதி கடைவீதிகளில் நடைபெற்றது.

திருவல்லிக்கேணி பகுதிக் கழகம் சார்பாக துண்டறிக்கை மற்றும் கடைவீதி வசூல், ஏப்ரல் 3–ஆம் தேதி மாலை 7 மணியளவில், ஆதாம் மார்கெட் பகுதி கடைவீதிகளில் நடைபெற்றது.

ஏப்ரல் 4 ஆம் தேதி வேளச்சேரி பேருந்து நிலையப் பகுதிகளிலும் நடைபெற்றது.

ஏப்ரல் 6 ஆம் தேதி சேப்பாக்கத்தில், ஏப்ரல் 7ஆம் தேதி மாலை 7 மணியளவில் தரமணியில் உள்ள கடைவீதிகளிலும் நன்கொடை திரட்டும் பணிகளை மேற்கொண்டனர்.

கிண்டி, மடிப்பாக்கம், வேளச்சேரி பகுதிகளில் உள்ள 8 இடங்களில் கழகத் தோழர்கள் சுவரெழுத்துப் பணியை மேற்கொண்டனர்.

பங்கேற்றோர் : திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் அருண், பகுதி அமைப்பாளர் இராஜேஷ், எட்வின் பிரபாகரன், மாணிக்கம், குமார், ப்ரீத்தி, ரம்யா, விஜயகாந்த், சரண், யாழினி, வீரா, சூர்யா.

**மயிலைப் பகுதி:** மயிலைப் பகுதித் தலைவர் இராவணன், மனோகர், ஓவியா, இளவரசன், அஜித், பிரவின், கார்த்திக், பார்த்திபன், உமாபதி, சிவா.

**சேலம் :** சேலம் மாவட்டக் கழக சார்பில் மாநாட்டு நன்கொடை திரட்டும் பணி, ஏப்ரல் 3 ஆம் தேதி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் கோவிந்தராஜ், மேட்டூர் நகர தலைவர் மார்ட்டின் ஆகியோர் தலைமையில் காலை 11:30 மணிக்கு நடைபெற்றது மேட்டூர் நகரத்திலுள்ள அனைத்து தரப்பு மக்களும் மாநாட்டு நிதி வழங்கி பெரும் ஆதரவு தெரிவித்தனர். ரூ. 49,610 நன்கொடை திரட்டப்பட்டது.

பங்கேற்றோர் : கோவிந்தராஜ், மார்ட்டின், பாஸ்கரன், கிட்டு, குமரப்பா, அம்ஜத்கான், ரத்தினசாமி, சுந்தரம், தேவராசு, முத்துராஜ், தர்மன், திவாகர், மாதையன், விஜய், திவாகர், கீதா, சீனி, விவேக், முரளி, ஜெகதீஷ், நாகராஜ், பொன்னாட், ராமச்சந்திரன், பிரபு, இந்திராணி, அருள், ராஜேந்திரன், அன்பு, கொளத்தூர் சுதா, ராமமூர்த்தி, அறிவு செல்வன், சரஸ்வதி, சுரேஷ், மாரி செட்டி உள்ளிட்டோர். பங்கேற்ற தோழர்களுக்கான மதிய உணவை மார்ட்டின் ஏற்பாடு செய்தார்.

**காவலாண்டியூர்:** கழக மாநாட்டினை ஒட்டி காவலாண்டியூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் சத்தியநாதன் ரூ.50,000 – யை கழகத் தலைவரிடம் வழங்கினார்.

ஏப்ரல் 5 ஆம் தேதி அன்று காவலாண்டியூர் கிளை சார்பில் சேலத்தில் தனிநபர் நன்கொடை திரட்டும் பணி நடைபெற்றது. ரூ.22,500/– நன்கொடை திரட்டப்பட்டது.

பங்கேற்றோர் : கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சித்துசாமி, கண்ணையன், கொளத்தூர் விஜி, கொளத்தூர் தீனா உள்ளிட்டோர்.

**நங்கவள்ளி :** ஏப்ரல் 6 ஆம் தேதி எடப்பாடியில் நங்கவள்ளி ஒன்றியக் கழகச் செயலாளர் இராசேந்திரன் தலைமையில் பொதுமக்கள் மற்றும் வியாபார பெருங்குடி மக்களிடத்தில் நன்கொடை திரட்டும் பணி நடைபெற்றது. ரூ.17,620 நன்கொடை திரட்டப்பட்டது.

பங்கேற்றோர் : தேவராஜ், முத்துராஜ், அண்ணாதுரை, ஜெகதீஷ், நாகராஜ், சக்திவேல், சுசி, விவேக், நங்கவள்ளி இந்திராணி, நிறைமதி, பன்னீர்செல்வம், அருள்குமார், ராஜேந்திரன், அன்பு, கொளத்தூர் ராமமூர்த்தி, அறிவுச்செல்வன், மாரி, சரஸ்வதி, சுதா, கனலி, சங்கிரி செந்தில்குமார் உள்ளிட்டோர்.

**சேலம் கிழக்கு** மாவட்டக் கழக சார்பில் ஏப்ரல் 07 ஆம் தேதி குரங்குச்சாவடி பகுதிகளில் மாநாட்டு நன்கொடை ரூ. 21,200 திரட்டப்பட்டது.

இதில் பெரும் தொகையாக தமிழக வாழ்வுரிமை கட்சி சேலம் மாவட்டச் செயலாளர் மோகன்ராஜ், செயற்குழு உறுப்பினர் எஸ்.தமிழரசன் ஆகியோர் மாநாட்டு நன்கொடையாக ரூ.20,000 வழங்கினார்கள்.

பங்கேற்றோர்: பெரியார் விழுது நிலா, தமிழ், கிருஷ்ணன், தங்கதுரை,

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

# நீதிபதி ஜி.ஆர். சாமிநாதன் மீது நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் வரவேண்டும்

மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதியாக இருக்கிற ஜி.ஆர். சாமிநாதன் அரசியல் சட்டத்தை எதிர்த்தும், மதவாதக் கொள்கையை ஆதரித்தும் பகிரங்கமாக பேசத் தொடங்கி இருக்கிறார்.

மகர சடகோபன் என்பவர் எழுதிய “திருப்பாவையில் நிர்வாக மேலாண்மை” என்ற நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடந்திருக்கிறது. அந்த மேடையில் எச்.ராஜா, ரங்கராஜ் பாண்டே ஆகியோரும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு மேடையை பகிர்ந்து கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் ஆர்.எஸ்.எஸ். கருத்தை அப்படியே எதிரொலித்திருக்கிறார். இந்தியா இந்துக்கள் நாடாக இருக்கும் வரைத்தான் இங்கு மதச்சார்பின்மை நீடிக்க முடியும் என்று ஆர்.எஸ்.எஸ். கூறுகிறது.

ஜி.ஆர்.சாமிநாதன் இதே கருத்தை பாரதிய சம்பிரதாயத்தை நாம் காப்பாற்றுகிற வரையில் தான் அரசியல் சட்டமே இங்கு இருக்கும் என்று கூறுகிறார்.

பாரதிய சம்பிரதாயம் என்றால் என்ன? அது பார்ப்பனிய சம்பிரதாயம். இந்திய சம்பிரதாயம் என்ற வார்த்தையைக் கூட அவர்கள் பயன்படுத்த தயாராக இல்லை. ஆர்.எஸ்.எஸ். பயன்படுத்தும் ‘பாரதிய’ என்ற சொற்றொடரைத் தான் இவரும் பயன்படுத்துகிறார். இந்தியா என்ற சொற்றொடரை ஆர்.எஸ்.எஸ். சங்பரிவாரங்கள் எப்பொழுதும் பயன்படுத்துவதே இல்லை. அதேபோல அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட போது இருக்கின்ற மக்கள்தொகை விகிதாச்சாரம் அப்படியே மாற்றப்படாமல் இருக்க வேண்டும் அப்பொழுதுதான் அரசியல் சட்டம் இருக்கும் என்றும் ஜி.ஆர். சாமிநாதன் கூறியிருக்கிறார்.

மக்கள் தொகை விகிதாச்சாரம் என்று இவர் கூறுவது இந்துக்களுடைய விகிதாச்சாரம், இஸ்லாமியர்களுடைய விகிதாச்சாரம், கிறிஸ்தவர்களுடைய விகிதாச்சாரம், Demographic profile என்ற ஆங்கில சொற்றொடரை பயன்படுத்தி ஜி.ஆர்.சாமிநாதன் கூறுகிறார். இந்த நாடு இந்துக்களுடைய தேசம் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக விடக்கூடாது அத்தகைய ஆபத்து இருக்கிறது என்று ஆர்.எஸ்.எஸ். கூறி வருகிற கருத்தைத் தான் இப்போது ஜி.ஆர்.சாமிநாதனும் அப்படியே பேசி இருக்கிறார்.

சமஸ்கிருத அகராதி வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற விஜயேந்திர சரஸ்வதி தமிழ்த் தாய் வாழ்த்து பாடுகின்றபோது அவர் எழுந்து நிற்கவில்லை, அவர் தியானத்தில் இருந்தார் என்று பார்ப்பனர்கள் சொன்னார்கள். ஆம், சுவாமிகள் தியானத்தில் தான் இருந்தார் என்று கூறி அவருக்குப் பெருமை சேர்த்து இருக்கிறார் ஜி.ஆர்.சாமிநாதன். இதை எதிர்த்து ஒரு கட்சியினர் போராடிய போது அவர்கள் ராமேஸ்வரத்தில் சங்கர மடத்தைத் தாக்கிய வழக்கை தான் விசாரித்ததாகவும், அந்த வழக்கில் ஏன் இந்த தாக்குதலை நடத்தினீர்கள் என்று கேட்ட பொழுது அந்தக் கட்சியினர் நாங்கள் எல்லாம் தமிழ் ஆர்வலர்கள் என்று கூறியதாகவும் அப்படியானால் இரண்டு திருக்குறளை கூறு என்று கூறியவுடன் அவர்களால் ஒரு குறளைக் கூட கூற முடியவில்லை என்று கேலியாக பேசியிருக்கிறார். தமிழ் ஆர்வலர்களாக இருப்பவர்கள் என்று சொன்னால் தமிழ் உணர்வுக்கு தமிழ்மொழி உரிமைக்கு போராடுபவர்கள் அத்தனை பேரும் தமிழ் ஆர்வலர்கள் தான். திருக்குறள்தான் தெரிந்திருக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

எத்தனையோ பார்ப்பனர்கள் கோயில்களில் சமஸ்கிருதத்தில் மந்திரங்களை ஓதிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மந்திரங்களுக்கு பார்ப்பன அர்ச்சகர்களுக்கு பொருள் தெரியுமா? சனாதன வேத மதத்தை ஆதரிக்கும் பார்ப்பனர்கள் அனைவருக்கும் சமஸ்கிருதம் தெரியுமா? இத்தகைய கேள்விகளை ஜி.ஆர். சாமிநாதன் பார்ப்பனர்களிடம் கேட்பாரா? நிச்சயமாக அவர் கேட்க மாட்டார். தனது வீட்டில் மஹா பெரியவர் சங்கராச்சாரி படத்தை மாட்டி வைத்திருப்பதாக அவர் பெருமையுடன் கூறியிருப்பதோடு திராவிட இயக்கத்தைச் சார்ந்த முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் தன்னைச் சந்திக்க வந்தபோது அந்தப் படத்தைப் பார்த்து இவர் யார் உங்கள் தாத்தாவா என்று கேட்டதாக கேலி செய்திருக்கிறார். அதுவும் திராவிடக் குரலில் அவர் பேசியதாகக் கூறி கலைஞரைப் போல பேசி காட்டுகிறார். ஆக அவருக்கு திராவிடத்தின் மீது எவ்வளவு வெறுப்பு, வன்மம் இருக்கிறது என்பதையும் வெளிப்படையாக பேசியிருக்கிறார்.

யார் இந்த மகா பெரியவர்? தீண்டாமை ஷேமகரமானது என்று கூறியவர். பெண்கள் வேலைக்குப் போக கூடாது என்று சொன்னவர். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வந்த பிறகு “பிராமண” பிள்ளைகள் மிகவும் பாதிக்கப்பட்டதாக வெளிப்படையாக சொன்னவர். இவை அரசியல் சட்டத்திற்கு எதிரானது. அரசியல் சட்டத்திற்கு எதிரான சந்திரசேகர சரஸ்வதி படத்தைத் தனது வீட்டில் மாட்டி இருப்பதை பெருமையாகக் கூறியதோடு அந்த திராவிட இயக்கத் தலைவர் உங்கள் தாத்தாவா என்று கேட்டதை கேலி செய்திருக்கிறார். அந்த திராவிட இயக்கத் தலைவர் நாசூக்காகத்தான் கேட்டிருக்கிறார். உங்கள் தாத்தா படத்தை வேண்டுமானால் மாட்டிக் கொள்ளுங்கள்; சட்டத்திற்கு விரோதமாக கருத்துகளை தெரிவித்த இந்த சங்கராச்சாரி படத்தை மாட்டி வைத்திருக்கிறீர்களே ஏன்? என்று நக்கலாகத் தான் அந்த திராவிட இயக்க முன்னாள் அமைச்சர் கேட்டிருக்கிறார் என்பதைக்கூட ஜி.ஆர். சாமிநாதனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இவரது பேச்சுகள் உச்ச நீதிமன்றத்தின் கருத்துக்கும் எதிராக இருக்கிறது. கடந்த 29.3.2023 அன்று நீதிபதிகள் கே என் ஜோசப், வி.நாகர்ஜுனா ஆகியோர் அடங்கிய அமர்வு ஒரு முக்கிய தீர்ப்பை கூறி இருக்கிறது. “வெறுப்பு எனும் ஒரு தீய வளையத்தில் நமது தேசம் சிக்கிக் கொண்டுள்ளது. இதற்குத் தீர்வு அரசியலில் இருந்து மதத்தை வெளியேற்றுவது மட்டுமே” என்று கூறியிருக்கிறது. ஆனால் மதம் இருக்கின்ற வரை தான் அரசியல் சட்டமே இருக்கும் என்று அதற்கு நேர் முரணான ஒரு கருத்தைக் கூறி சங்கராச்சாரி தமிழ்த் தாய் வாழ்த்திற்கு எழுந்து நிற்காததற்கு ஆதரவாகப் பேசி, தீண்டாமைக்கு ஆதரவாக பேசிய மகா பெரியவரே தனது குருவாக ஏற்றுக்கொண்டு திராவிடத்தையும் கேலி பேசுகிறார். இவர் மீது நிச்சயமாக நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் ஒன்றை கொண்டு வர வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற கருத்தை நாம் வலியுறுத்துகிறோம்.

வைக்கம் : சில வரலாற்றுக் குறிப்புகள்

# காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு ஒரு நீதி; பெரியாருக்கு ஒரு நீதி

வைக்கம் போராட்டத்தில் பெரியார் சிறைச் சாலைகளையும் அடக்குமுறைகளையும் சந்தித்தார். அதே நேரத்தில் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த காங்கிரஸ் பார்ப்பனர்கள் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட்டனர்.

- வைக்கம் போராட்டத்தைப் பார்வையிட வந்த காங்கிரஸ் தலைவர் சீனிவாச அய்யங்கார் வைக்கம் திவான் வீரராகவ அய்யங்கார் வீட்டில் தங்கினார்.
- மற்றொரு காங்கிரஸ் தலைவர் எஸ்.வி. வெங்கட்ரமண அய்யங்கார், காவல்துறை ஆணையர் அனுப்பிய காரைப் பயன்படுத்தினார். தீண்டாமையை ஆதரித்த வைதீகர்களுடன் சேர்ந்து விருந்து உண்டார்.
- வைக்கம் போராட்டத்தில் மன்னர் மரணமடைந்த வுடன் மகாராணி அதிகாரத்துக்கு வந்தவுடன் போராட்டத்தின் கோரிக்கைகளை ஏற்க முன் வந்தார். அப்போது திவான் பெரியாரோடு நாங்கள் பேச விரும்பவில்லை என்று கூறிவிட்டார். காரணம் பெரியார், திருவாங்கூர் சமஸ்தானத் துக்கும் வைதீகர்களுக்கும் எதிராக சமரசமின்றி போராடியது தான். இந்த நிலையில் ராஜாஜியை திவான் அழைத்து காந்தியாரோடு சமரசம் பேச ஏற்பாடு செய்யுமாறு கூறுகிறார். வைக்கம் போராட்டத்தில் பெரியார் பங்கேற்பதையே விரும்பாத ராஜாஜி, திவான் வேண்டுகோளை ஏற்று காந்தியாரோடு பேசி வைக்கம் வரவழைத்தார்.
- வைக்கம் வந்து சேர்ந்த காந்தியாரை சமஸ்தான அரசு தனது விருந்தினராகவே நடத்தி கவுரவித்தது. அதே நேரத்தில் பெரியார் வைக்கம் வந்தபோது மன்னர் தந்த வரவேற்பைப் புறக்கணித்து போராட்டக் களத்தில் குதித்தவர் பெரியார்.

இதுதான் சனாதனம்; இதுதான் பார்ப்பனியம்!

# களப்பணி: செயல்வீரர்களுக்கு கழகத் தலைவர் பாராட்டு

கழகம் நடத்தும் ஏப்.29, 30இல் “இளம் தலைமுறையின் எச்சரிக்கை” மாநாட்டிற்கான களப் பணியில் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கும் சேலம் மாவட்ட கழகத் தோழர்களுக்கு கழகத் தலைவர் பாராட்டுதல்களை தெரிவித்து பயனாடை அணிவித்தார்.

கழகத் தலைவரின் ஆலோசனைப்படி சேலம் ஒருங்கிணைந்த மாவட்டத்தில் மாநாட்டிற்கான ஆதரவு திரட்டுதல் மற்றும் நிதி வசூலுக்காக நங்கவள்ளி அன்பு, இராஜேந்திரன் தலைமையில் சேலம் மேற்கு குழுவும், நங்கவள்ளி கிருஷ்ணன், இளம்பிள்ளை தங்கதுரை தலைமையில் சேலம் கிழக்கு குழுவும் அமைக்கப்பட்டு மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் துண்டறிக்கை வழங்குவது மற்றும் நிதிதிரட்டுவது ஆகியவற்றில் தோழர்கள் தொய்வின்றி கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாமல் மிகச் சிறப்பாக களப்பணியாற்றி வந்ததை நாள்தோறும் கவனித்து வந்த கழகத் தலைவர், தோழர்களைப் பாராட்டும் விதமாக நிகழ்வு ஒன்றை மாவட்டக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யக் கேட்டுக்கொண்டார்

அதன்படி மேட்டூர் கழக நகரத் தலைவர் செ. மார்ட்டின் உணவு ஏற்பாட்டுக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டார். கொளத்தூர் உக்கம்பருத்திக்காடு கழகத் தோழர்கள் கருப்பு உடைக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

களப்பணித் தோழர்களை மேலும் உற்சாகமூட்டும் வகையில் 09.04.23 அன்று மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் மதியம் அசைவ உணவு விருந்தளிக்கப் பட்டு, கறுப்பு ஆடை அணிவித்து கழகத் தலைவர் சிறப்பு செய்தார். தோழர்கள் தங்கள் பணிகளில் ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி. கோவிந்தராசு முன்னின்று நடத்தினர்.

# பெண்களின் சுயமரியாதையை நிலைநாட்டும் திராவிட மாடல் (அன்றும்–இன்றும்)

*12.03.2023 அன்று திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற “அன்னை மணியம்மையார் பிறந்தநாள் மற்றும் மகளிர் தின பெண்கள் சந்திப்பு” நிகழ்ச்சியில் நிகழ்த்திய உரை.*

**ரம்யா**

பெண்களின் சுயமரியாதை என்பது எதில் அடங்கியிருக்கிறது என்பதில் இருந்துதான் தலைப்பை ஆராய வேண்டியிருக்கிறது. கல்வி, வேலை வாய்ப்பு அதன்மூலம் சமூகத்தில் பெண்கள் அடையும் வளர்ச்சியில்தான் அவர்களின் சுயமரியாதை அடங்கியிருக்கிறது. பெண்கள் வளர்ச்சி இல்லாமல் ஒட்டுமொத்த சமூகத்தின் வளர்ச்சி இல்லை. அதை திராவிடர் இயக்கம் நன்கு புரிந்து வைத்திருந்தது. பெண் என்றால் எப்படி இருக்க வேண்டுமென்று இந்துமதம் நிறைய கட்டுபாடுகள் வைத்திருக்கிறது. இந்து மதம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றால், ஜாதிய கட்டமைப்பு பலமாக இருக்க வேண்டும். ஜாதிய கட்டமைப்பு பலமாக இருக்க வேண்டும் என்றால் பெண்களை அடக்கி, ஒடுக்கி வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் ஜாதி கவுரவம் பெண்களிடத்தில்தான் இருக்கிறது. பெண்களுடைய கற்பில்தான் குடும்ப கவுரவம், ஜாதிப் புனிதம் இருக்கிறது.

ஒரு பெண் திருமணம் ஆகும்வரை தந்தையின் அரவணைப்பிலும், திருமணம் ஆனபின் கணவனின் அரவணைப்பிலும், முதுமைக்காலத்தில் மகனின் அரவணைப்பிலும்தான் இருக்க வேண்டும் என்று மனுசாஸ்திரம் சொல்கிறது. காலங்காலமாக அப்படி இருந்த பெண்களை மாற்றியது கல்வி. இன்று பெண்கள் படித்து வேலைக்கு செல்கிறார்கள், தொழில் தொடங்குகிறார்கள், அரசியல் என எல்லா துறைகளிலும் பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒரு காலத்தில் பெண்களுக்கு ஓட்டுப்போடும் உரிமை கூட இல்லாமல் இருந்தது. அந்த உரிமையை பெற்றுக் கொடுத்ததும் திராவிட இயக்கம்.

1921-இல் நீதிக்கட்சி பெண்களுக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்தது. அப்போது இருந்த ஆளுநர் உடனடியாக ஒப்புதல் தராததால், சற்று தமாதமாக 1926-இல் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. அதேபோல, சட்டசபையில் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் முதன்முதலாக வழங்கப்பட்டதும் 1926-இல் தான். முதன்முதலாக பெண் நியமன உறுப்பினராக சட்டசபைக்கு சென்றவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி. அவர்தான் தேவதாசி முறையை ஒழித்தார். ஆனால் அப்போதும் 18 வயதுக்கு மேல் உள்ள பெண்கள் விரும்பினால் தேவதாசியாகப் போகலாம் என்ற குறை இருந்தது. 1947-இல் ஓமந்தூரார் ஆட்சியில் தேவதாசி முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது.

பெரியாருக்கு நீதிக்கட்சி மீது ஒரு பெரிய ஈர்ப்பு வர இரண்டு முக்கியமான காரணங்கள் இருந்தன. ஒன்று, அவர் காங்கிரஸில் வலியுறுத்திய வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை நீதிக்கட்சி செயல்படுத்தியது. மற்றொன்று, நீதிக்கட்சி ஆட்சியில் தேவதாசி முறையை ஒழிக்க முயற்சிகள் எடுத்தது. 1926-இல் இருந்தே பெரியார் பெண்ணிய கருத்துக்களை பேசத் தொடங்கியிருந்தார். காதல், கற்பு, கல்யாணம், மறுமணம், விபச்சாரம், சொத்துரிமை, ஆணாதிக்க ஒழிப்பு என பல்வேறு தலைப்புகளில் பெரியார் குடியரசு இதழில் கட்டுரைகள் எழுதினார். அந்த கட்டுரைகளைத் தொகுத்து “பெண் ஏன் அடிமையானாள்” புத்தகத்தின் முதல் பதிப்பை 1933-இல் வெளியிட்டார். புத்தகம் வெளியிடப்பட்டு 90 ஆண்டுகள் ஆகியும் இப்போதும் லட்சக் கணக்கில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

1929-இல் சென்னையில் சனாதன தர்மிகள் மாநாடு ஒன்று நடந்தது. அந்த மாநாட்டில் பேசிய சியாம்சந்திர சக்கரவர்த்தி என்ற வங்காள பார்ப்பனர், “பெண்கள் வயதுக்கு வந்தவுடன் கருத்தரித்தலை தடுப்பது சிசுக்கொலைக்கு சமம்” என்றார். ஆனால் அந்த காலகட்டத்தில்தான் பெரியார், “பெண்கள் கைகளில் இருக்கும் கரண்டியைப் பிடுங்கிவிட்டு புத்தகத்தை கொடுங்கள்” எனப் பேசினார்.

ஆக கல்வி பெண் விடுதலையின் மிக முக்கிய ஆயுதம் என்ற பார்வை பெரியாருக்கும், திராவிட இயக்கங்களுக்கும் இருந்தது.

**நூற்றாண்டின் திசையை நிர்ணயித்த செங்கல்பட்டு மாநாடு**

சாதி ஒழிப்பும், பெண்ணடிமைத்தன ஒழிப்பும் வேறு வேறு அல்ல, இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தது என்ற பெரியாரின் பார்வைதான் திராவிட இயக்கத்தின் கொள்கைக் கோட்பாடானது. திராவிட இயக்கத்தின் வழிவந்த திமுகவின் ஆட்சியில் அதுதான் சட்டங்களாக மாறியது. அந்த சட்டங்களில் சில அடுத்து வந்த அதிமுக ஆட்சியிலும் எதிரொலித்தது. உதாரணத் திற்கு சொல்ல வேண்டுமானால், 1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

1. பெண்கள் திருமண வயதை 16ஆக ஆக்க வேண்டும் (அன்றைக்கு 10, 12 வயதில் திருமணங்கள் நடந்து கொண்டிருந்தன)
2. விவாகரத்து உரிமை வேண்டும்
3. மறுமண உரிமை வேண்டும்
4. தனது துணையைத் தானே தேர்ந்தெடுக்கும் உரிமை அளிக்கப்பட வேண்டும்
5. பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும்
6. பெண்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும்

என அம்மாநாட்டில் பெண்கள் நலன் சார்ந்து முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1967-இல் அண்ணா ஆட்சிக்கு வந்த பிறகு கொண்டு வந்த சுயமரியாதை திருமணச் சட்டம், தனது துணையைத் தானே தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் கொடுத்தது. பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கும் சட்டத்தை கலைஞர் கொண்டுவந்தார். கல்வி, வேலைவாய்ப்பில் மகளிருக்கு இடஒதுக்கீடும் அவர் ஆட்சியில் கிடைத்தது. விவாகரத்து உரிமை, மறுமண உரிமை என செங்கல்பட்டு மாநாட்டு தீர்மானங்கள் பல இன்றைக்கு நடைமுறைக்கு வந்துவிட்டன.

> **1929-இல் சென்னையில் சனாதன தர்மிகள் மாநாடு ஒன்று நடந்தது. அந்த மாநாட்டில் பேசிய சியாம்சந்திர சக்கரவர்த்தி என்ற வங்காள பார்ப்பனர், “பெண்கள் வயதுக்கு வந்தவுடன் கருத்தரித்தலைத் தடுப்பது சிசுக்கொலைக்கு சமம்” என்றார். ஆனால் அந்த காலகட்டத்தில் தான் பெரியார், “பெண்கள் கைகளில் இருக்கும் கரண்டியைப் பிடுங்கிவிட்டு புத்தகத்தைக் கொடுங்கள்” எனப் பேசினார்.**

**கலைஞரின் ‘திராவிட மாடல்’ பெண்களுக்குக் கொடுத்தவை**

பெண் குழந்தைகள் எட்டாவது வரை படித்தால் திருமண நிதியாக, 5,000 ரூபாய் கொடுக்கப்படும் என கலைஞர் 1989-இல் சட்டம் போட்டார். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் என்று அதற்குப் பெயர் சூட்டினார். அந்த 5,000 ரூபாயே அன்றைக்கு ஏழைக் குடும்பங்களின் திருமணச் செலவுகளுக்கு போதுமானதாக இருந்திருக்கும். அதனால் அதைப் பெற வேண்டுமென்பதற்காகவது பெண் குழந்தைகளை படிக்க அனுப்பி வைக்கத் தொடங்கினார்கள். பின்னர் 2009-இல் அந்த நிதியை 25,000-ஆக உயர்த்தினார். அடுத்தடுத்து வந்த ஆட்சிகளில் ஆலமரமாய் வளர்ந்து அந்தத் திட்டம், தற்போது உயர்கல்வி வரை நீண்டிருக்கிறது.

அதேபோல, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கம், ஈவெரா நாகம்மையார் நினைவு இலவச பட்டப்படிப்பு திட்டம் (இன்றைக்கு முதுகலை பட்டப்படிப்பு வரை), அரசு வேலையில் மகளிருக்கு 30% இடஒதுக்கீடு (இப்போது 40% ஆக அதிகரிக் கப்பட்டிருக்கிறது). சொத்துரிமை, உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு, டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், திருநங்கைகள் நலவாரியம், திருமணம் ஆகாமல் 50 வயதைக் கடந்த பெண்களுக்கு மாதாந்திர நிதியுதவி என கலைஞரால் பெண்கள் நலன் சார்ந்து இயற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். அதன்பிறகு ஜெயலலிதா ஆட்சியிலும் இத்திட்டங்கள் நீண்டன. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், சானிட்டரி நாப்கின் இலவசமாக வழங்கும் திட்டம் என சிலப் புதிய நல்ல திட்டங்களையும் ஜெயலலிதா உருவாக்கினார்.

**கலைஞரின் நீட்சியாக ஸ்டாலின் ஆட்சி...**

திமுக ஆட்சியின் தற்போதைய 2 ஆண்டுகளிலும் பல முக்கியத் திட்டங்களைச் செயல்படுத்தி யிருக்கிறார்கள். அதில் முக்கியமானது “புதுமைப் பெண் திட்டம்”. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 12ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கான நிதியுதவியை, 2011-இல் ஜெயலலிதா 50,000 ரூபாயாக உயர்த்தினார். அதனுடன் 4 கிராம் தாலிக்குத் தங்கம் வழங்கப்படும் என்று அறிவித்தார். பெண் கல்வியை ஊக்குவிக்க நிதி கொடுப்பது என்ற கலைஞரின் திட்டத்தின் நீட்சிதான் இது என்றாலும், தாலிக்கு தங்கம் கொடுப்பது திராவிட மாடலாக இருக்காது, ஆரிய மாடலாகத்தான் இருக்கும். அதற்கு மாற்றாகத்தான் “புதுமைப் பெண்” திட்டத்தை தற்போதைய முதலமைச்சர் முகஸ்டாலின் கொண்டு வந்தார். இத்திட்டத்தின் கீழ், கல்லூரி படிக்க வரும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தால் மாணவிகள் உயர்கல்வி சேர்க்கை 29% அதிகரித்திருக்கிறது. புதுமைப் பெண் திட்டத்தால் அடுத்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பெண்களின் கல்வி, பல ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக மேம்படும் என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

அதேபோல, நகர்ப்புற பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணம் திட்டமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பெண்கள் படி தாண்டக் கூடாது, படிக்கப் போகக்கூடாது, வேலைக்குப் போகக்கூடாது என்ற அவர்களின் சனாதன கோட்பாடுகளை வெடி வைத்து தகர்க்கும் திட்டங்களை ஒன்றாகவே இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் தாக்கம் குறித்து, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் திட்டக்குழு உறுப்பினர் விஜயபாஸ்கர் கள ஆய்வு ஒன்றை நடத்தினார். சென்னை, நாகப்பட்டினம், திருப்பூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. குறைந்த ஊதியம் பெறுகிற, அதாவது மாதம் 12,000 ரூபாய்க்கு குறைவாக சம்பளம் வாங்கும் பெண்கள்தான் 80% இந்த ஆய்வில் பங்கெடுத்தார்கள். பெண்கள் தங்கள் வருமானத்தில் சராசரியாக 8 முதல் 12% மீதப்படுத்த இத்திட்டம் உதவுகிறது. சென்னையில் சராசரியாக ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 858 ரூபாயும், மற்ற மாவட்டங்களில் 888 ரூபாயும் இந்தத் திட்டத்தில் மிச்சமாகிறது என்பது இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது. இது அவர்களின் பயணத்தொலைவைப் பொறுத்து மாறுபடும். சிலருக்கு மாதம் 3,000 ரூபாய்கூட மீதமாகிறது. மீதமாகும் பணத்தில் குழந்தைகளுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுக்கிறார்கள், மருந்து- மாத்திரைகள் வாங்க பயன்படுத்துகிறார்கள்.

இந்தத் திட்டத்திற்கு முன்னால் நகரப் பேருந்துகளில் பெண் பயணிகளின் எண்ணிக்கை 40% ஆக இருந்தது. ஆனால் இப்போது 60% ஆக உயர்ந்துள்ளது. கூலி வேலைக்குச் செல்பவர்கள், கடைகளுக்கு வேலைக்கு செல்பவர்கள், காய்கறி-பழங்கள் விற்க செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதிலும் சமூகத்தின் அடித்தட்டில் இருந்து வரும் பெண்களுக்கு இந்தத் திட்டம் மிகப்பெரிய உதவிகரமாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது. கட்டணமில்லா பேருந்து பயணத்தை பயன்படுத்தக்கூடிய பெண்கள் சுமார் 39% பட்டியல் சமூகத்தினராக இருப்பதாக திட்டக் குழு ஆய்வறிக்கை கூறுகிறது. பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் 21%, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் 18% இதன் மூலம் பயனடைகின்றனர்.

* அரசுப்பணியில் மகளிருக்கு இடஒதுக்கீட்டை 40% ஆக அதிகரித்தது
* நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்படும் வீடுகள் குடும்பத்தலைவிகள் பேரில் வழங்கப்படும் என அறிவித்தது.
* நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் பெண் களுக்கு 50% இடஒதுக்கீடு
* சிப்காட் வேலைகளில் பெண்களுக்கு முன்னுரிமை
* உள்ளாட்சி அமைப்புகளில் 50% இடஒதுக்கீடு

என கடந்த 21 மாதங்களில் பல முக்கிய திட்டங்களைத் முகஸ்டாலின் தலைமையிலான அரசு பெண்களுக்கு கொடுத்திருக்கிறது.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## வைக்கம் போராட்டம்: சில வரலாற்றுக் குறிப்புகள்

# சனாதனத்தின் முகத்திரையைக் கிழிக்க சேலத்தில் கூடுவோம்; வாரீர்!

- *வைக்கத்தில் ‘முறை ஜெபம்’ என்ற சடங்கு நிகழும்போது, தீண்டப்படாதவர்கள் கோயிலைச் சுற்றி எந்த வீதிகளிலும் நடப்பதற்கு அனுமதிப்பது இல்லை. டி.கே. மாதவன் என்ற ஈழவ சமுதாய வழக்கறிஞர் நீதிமன்றம் போவதற்கான பாதை அடைக்கப்பட்டதால்தான் பிரச்சினை தீவிரமாகியது. அது என்ன முறை ஜெபம்? 6 ஆண்டுகளுக்கு ஒரு முறை நம்பூதிரி பார்ப்பனர்களுக்காக மட்டும் திருவிதாங்கூர் அரசர் நடத்தும் ஒரு சடங்குதான் ‘முறை ஜெபம்’.*

- *150 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மன்னர் ‘பிராமணன்’ ஒருவனைக் கொன்றதற்காக நடத்தப்படும் பிராயச்சித்த சடங்கு. 60 நாட்கள் இந்த ஜபம் நடக்கும். அனைத்து நம்பூதிரிகளும் பங்கேற்பார்கள். ஒவ்வொரு நம்பூதிரிக்கும் ஏதாவது வசதி குறைவுகள் இருக்கிறதா என்பதை அரசர் நேரில் கேட்டு அறிந்து குறைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பார். அவர்கள் தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படும். 25 ஆண்டுகாலம் இந்த சடங்கை நடத்த வேண்டும் என்று தொடங்கியபோது முடிவு செய்யப்பட்டது. பார்ப்பனர்கள் விடுவார்களா? 25 ஆண்டுகாலத்துக்குப் பிறகும் இந்த சடங்கைத் தொடர்ந்து நடத்தி அரசுப் பணத்தை வாரி சுருட்டி வந்தனர். 28ஆவது ஆண்டு தான் 1924இல் நடந்ததாகும். அப்போது அதற்கு சமஸ்தானம் ஒதுக்கிய தொகை ரூ.6 இலட்சம்.*

- *களங்கப்படுத்துதல்* (Defile) *என்ற சொல்லுக்கு பார்ப்பன அகராதியில் ஒரு விளக்கம் தருகிறார்கள். 1885இல் முத்துசாமி அய்யர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது அவரிடம் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது. ‘ஆசாரி’ சமூகத்தைச் சார்ந்த ஒருவர் கோயிலுக்குள் சென்று அவரே ‘அபிஷேகம்’ செய்து சாமி சிலையை களங்கப்படுத்திவிட்டார் என்பது வழக்கு. விசாரணையில் அய்ரோப்பிய நீதிபதி போர்ட்டர், “இயற்கையாக உருவாகும் அசுத்தம் தான் களங்கம்; இதுதான் ஆங்கில அகராதி தரும் அர்த்தம்” என்றார். ஆனால் நீதிபதி முத்துசாமி அய்யர், “பிராமணர்கள் அதை எந்தப் பொருளில் எடுத்துக் கொள்கிறார்களோ அந்தப் பொருளைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். இது தாந்திரிகமான அசுத்தம்; களங்கப்படுத்துதல் ஆகும்” என்று விளக்கம் தந்தார். ‘அபிஷேகம்’ செய்த ஆசாரி சமூகத்தைச் சார்ந்தவருக்கு தண்டனை வழங்கப்பட்டது. இதே அடிப்படையில் தீண்டாமையை நியாயப்படுத்தும் பல தீர்ப்புகள் வழங்கப்பட்டன. இதுதான் ஆளுநர் ரவி பேசும் சனாதனப் பாரம்பர்யப் “பெருமை”.*

- *நீதிபதி சதாசிவம் அய்யர் ஒரு தீர்ப்பில், “எண்ணெய் ஆட்டும் வாணிய செட்டியார் விதைகளின் உயிரை அழிக்கிற பாவச் செயல்களில் ஈடுபடுகிறவர்கள் என்பதால் அவர்களின் கோயில் நுழைவு ‘தீட்டாகி’ விடும் என்று தீர்ப்பளித்தார். பார்ப்பனர் உண்ணும் காய்கறிகளின் உயிர்களும் அழிக்கப்படுகிறது என்பது சதாசிவ அய்யருக்கு தெரியாதா?*

- *வைக்கம் போராட்டம் நடந்தபோது வைதீகப் பார்ப்பனர்கள் ‘பகவான்’ வைக்கத்து அப்பனிடம் பூக்கட்டி வைத்து, தாழ்த்தப்பட்ட மக்களை சாலைகளில் அனுமதிக்கலாமா என்று கேட்டபோது, அனுமதிக்கலாம் என்று வைக்கத்து அப்பன் கூறி விட்டான். உடனே, ‘பிராமணர்கள்’ சாமிக்கு சக்தி குறைந்து விட்டது. ஹோமம் நடத்தி உத்தரவு கேட்கலாம் என்று கூறி மூன்று நாள் ‘ஹோமம்’ (வேத சடங்கு) நடத்தி உத்தரவு கேட்டபோது அப்போதும் நடமாட அனுமதிக்கலாம் என்று ‘பூவரம்’ கொடுத்து விட்டது கடவுள். அதற்குப் பிறகுதான் நம்பூதிரிகளும் நாயர்களும் கூடி ஆலோசித்துப் போராடும் சத்தியாகிரகிகளைக் குறிப்பாக “ஈ.வெ.ராமசாமி நாயக்கரை” அழித்து ஒழிக்க சத்ரு சம்ஹார யாகம் நடத்தினார்கள். தீண்டாமையும் சனாதனமும் பிரிக்க முடியாதவை. அந்த சனாதனப் பெருமையைத் தான் சங்கிகளும் ஆன்லைன் ஆளுநர் ரவியும் பேசுகிறார்கள்.*

**இந்த நச்சுப் பார்ப்பனியத்தை நயவஞ்சக ஒடுக்குமுறை விளக்குவதே சேலம் மாநாடு.**

**நீதிபதிகள் முத்துசாமி அய்யரும், சதாசிவ அய்யரும், ஜி.ஆர். சாமிநாதன்களாக உருவெடுத்து நிற்பதை அம்பலப்படுத்தவே சேலம் மாநாடு.**

**தோழர்களே, திரண்டு வாரீர்!**

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

பிரபாகரன், அருள் பாண்டியன், திவ்யா, தேவராஜ், இளம்பிள்ளை ரவி, வெள்ளார் சிவா ஆகியோர்.

ஏப்ரல் 08 ஆம் தேதி உக்கம்பருத்திக்காடு கிளைக் கழக சார்பில் திரட்டப்பட்ட தொகை ரூ.1,00,000 தொகையை கிளைக்கழகத் தலைவர் சுப்பிரமணியம் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினார்.

செல்வேந்திரன், சுரேஷ், கொளத்தூர் விஜி, இராமமூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஏப்ரல் 8 ஆம் தேதி தாரமங்கலம், குரங்குசாவடி ஆகிய பகுதிகளில் நன்கொடை திரட்டும் பணி நடைபெற்றது. ரூ.9000 திரட்டப்பட்டது.

பங்கேற்றோர் : காவை ஈசுவரன், கிருஷ்ணன், தங்கதுரை, திவ்யா, தேவராஜ், அருள் பாண்டியன், நிலா, சேகர், செல்வமணி உள்ளிட்டோர்.

**ஈரோடு** : ஏப்ரல் 3.4,5 ஆகிய தேதிகளில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமையில் ஈரோட்டில் நன்கொடை திரட்டும் பணி நடைபெற்றது. மூன்று நாளில் ரூ. 34,160 நன்கொடை திரட்டப்பட்டது.

பங்கேற்றோர் : ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் செல்வராசு, மாவட்டச் செயலாளர் எழிலன், சி.எம்.முருகேசன், சிவகுமார் ஆசிரியர், குமார், நங்கவள்ளி கிருஷ்ணன், இளம்பிள்ளை திவ்யா, பெரியார் விழுது நிலா,சுதர்சன், ஆனந்தி, காவை விக்னேஷ், தங்கதுரை, சந்திரசேகர், திருப்பூர் சங்கீதா, சேலம் தேவராஜ், ஹரி, முத்துராஜ், விருதுநகர் செந்தில், பிரபாகரன், இளம்பிள்ளை சேகர், அஜித்குமார், மு. சு. தோப்பூர், கிருஷ்ணன், மணிமேகலை உள்ளிட்டோர்.

**திருப்பூர் :** கழக மாநில மாநாட்டை ஒட்டி திருப்பூர் மாவட்டக் கழகத்தினர் திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேசு குமார், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்வராசு, திமுக செயற்குழு உறுப்பினர் எஸ்.பி.மணி, சிவபாலன் மற்றும் மேங்கோ பழனிச்சாமி ஆகியோரை சந்தித்து மாநாட்டு அழைப்பிதழை வழங்கினார்கள்.

திமுக செயற்குழு உறுப்பினர் எஸ்.பி.மணி ரூ.5000 நன்கொடை வழங்கினார்.

## கலிபோர்னியா மாநிலத்தில் ஜாதிப் பாகுபாடுகளுக்குத் தடை

*அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம், ஜாதிப் பாகுபாடுகளைத் தடை செய்யும் மசோதாவைக் கொண்டு வந்துள்ளது. ஏற்கனவே வாஷிங்டன் மாநிலத்திலுள்ள சீட்டில் நகரசபை இதேபோல ஒரு சட்டத்தை நிறைவேற்றி யுள்ளது. இப்போது அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலமே இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. மாநில சட்டமன்ற செனட்டர் ஆயிஷா வகாப் என்ற முஸ்லிம் பெண், இந்த மசோதாவை அறிமுகம் செய்துள்ளார்.*

*இவர் ஆப்கானிஸ்தானத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு அமெரிக்காவின் குடியுரிமைப் பெற்று சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு பெற்றுள்ளார். இது சமூகநீதி மனித உரிமைப் பிரச்சினை என்று அவர் கூறியுள்ளார். இந்த மசோதாவுக்கு அமெரிக்க இந்துக்கள் கூட்டமைப்பு போன்ற பார்ப்பன சனாதன அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.*

தகவல்: ‘டைம்ஸ் ஆப் இந்தியா’, மார்ச் 24, 2023

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 13th April 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN